# அன்பென்னும் வீணையிலே

அன்பென்னும் வீணையிலே
நல் ஆனந்த குரலினிலே
ஆலய மேடையிலே
உன் அருளினை பாடிடுவேன் } (2)

அகமெனும் கோவிலிலே
என் தெய்வமாய் நீ இருப்பாய் } (2)
அன்பெனும் விளக்கேற்றி
உன் அடியினை வணங்கிடுவேன்

அன்பென்னும் வீணையிலே
நல் ஆனந்த குரலினிலே
ஆலய மேடையிலே
உன் அருளினை பாடிடுவேன்

வாழ்வெனும் சோலையிலே
நல் தென்றலாய் நீ இருப்பாய் } (2)
தூய்மையெனும் மலரை
நான் தாழ்மலர் படைத்திடுவேன்

அன்பென்னும் வீணையிலே
நல் ஆனந்த குரலினிலே
ஆலய மேடையிலே
உன் அருளினை பாடிடுவேன்